**CC No.187/2019**
**Date 30.08.2024**
**PW : 1**
**பெயர் - திரு. சுப்பிரமணியன்**

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

உங்கள் தங்கை முப்பிடாதியை 2 ஆம் தாரமாக திருமணம் செய்து கொடுத்து அவருக்கு குழந்தைகள் உள்ளது என்றால் சரிதான். 2 வது எதிரி முத்துகிருஷ்ணன்க்கு உங்கள் தங்கையை சட்டபடி விவாகரத்து பெற்று தான் 2 வது திருமணம் செய்றீக்ளா என்றால் இல்லை பஞ்சாயத்து பேசி திருமணம் செய்து வைத்தோம்.வ ழக்கு சம்பவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு தான் பஞ்சாயத்து பேசி விவாகரத்து பெறப்பட்டது என்றால் சரிதான்.

சம்பவ இடத்திற்கு நாங்கள் காரில் தான் சென்றோம் என்றால் சரிதான். வழக்கு சம்பவத்தினை கார் ஓட்டுநர் பார்த்தர் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடைபெறும் போது காலை 11.00 மணி இருக்கும் என்றால் சரிதான். உங்கள் ஊருக்கும் அய்யனார்குளம்பட்டிக்கும் பத்தினிபாறை ஊருக்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் 20 கி.மீ தூரம் இருக்கும் சம்பவ இடத்திற்கு காரில் வந்தால் அரை மணி நேரம் ஆகும்.

வழக்கு சம்பவத்தை குறித்து மூன்றடைப்பு காவல்நிலையத்தில் புகார் அளித்துவிட்டு அதன் பிறகு தான் ஐகிரவுண்ட் மருத்துவமனையில் சேர்ந்தேன் என்றால் சரிதான். சம்பவ தினத்தன்றே சிகிச்கசக்கு சேர்ந்தேன் என்றால் சரிதான். மருத்துவமனையில் சேர்ந்த விபரத்தை கேட்டு உங்கள் மனைவி அமுதா, தங்கை அய்யப்பன் ஆகியோர்க்ள் பார்க்க வந்தார்கள் என்றால் சரிதான். சம்பவ காலத்தின் போது 2 வது எதிரி மூன்றடைப்பு உணவகத்தில் புரோட்டா மாஸ்டராக வேலை செய்தார் என்றால் சரிதான். 2 வது எதிரி காலை வேலைக்கு சென்று விட்டு இரவு 10.30 மணிக்கு வருவது தான் வழக்கம் என்றால் சரிதான். இரவு வேலைக்கு சென்றுவிட்டு வந்த நேரத்தில் 2 வது எதிரியின் அம்மாவான உங்கள் தங்கையின் மாமியார் உங்கள் தங்கையின் நடவடிக்கை சரியில்லை என்று சொல்லி இருவருக்கும் இடையே பிரச்சனை என்றால் சரிதான்.

2 வது எதிரி உங்கள் தங்கையை கண்டித்தால் உங்கள் தங்கை கோபம் அடைந்து உங்கள் வீட்டிற்கு வந்துவிட்டார் என்றால் சரிதான். எதிரி சந்தேகப்பட்டார் என்று பஞ்சாயத்து பேச வந்தீற்கள் என்றால் சரிதான். உங்கள் தங்கை அணிந்திருந்த தாலி செயினை அறுத்து எறிந்த போது இரண்டு துண்டுகள் ஆனது. மேற்படி

துண்டான செயினை காவல்நிலையத்தில் காண்பித்தீற்களா என்றால் சண்டையில் செயினை கண்டு பிடிக்க முடியவில்லை. சண்டையின் போது நீங்கள் கீழே விழுந்த இடத்தில் கல் இருந்ததால் கல் குத்தி தான் உங்களுக்கு காயம் என்றால் சரிதான்.

எதிரி கம்பால் தாக்கியதில் உங்களுக்கு மண்டை வீங்கி இரத்தம் வந்ததது என்றால் சரிதான். மருத்துவர் காயத்தினை பார்த்து சிகிச்சை செய்தார்கள் என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு சென்ற போது இரத்த வருவதால் மருத்துவமனை செல்ல அறிவுறுத்தினார்கள் என்றால் சரிதான். காவல்துறையிருந்து மருத்துவமனை செல்லும் போது காவல்நிலையத்தில் வைத்து உங்கள் காயத்தினை பார்த்து போலிசார் எழுதி கொண்டார்கள் என்றால் சரிதான்.

காயம்பட்ட போது காவல்நிலையத்தில் புகார் அளித்த போது போலிசார் எழுதி கொண்டதே நீங்கள் பார்க்காமல் கையெழுத்து செய்தீற்க்ள் என்றால் சரிதான். 2 வது எதிரிக்கு மற்றொரு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் நீங்கள் இருந்த போது போலிசார் விாசரணை செய்தார்களா என்றால் இரவு இரவு 7 மணியளவில் விசாரணை செய்தார்கள். 2 வது எதிரி நீங்கள் மருத்துவனை சென்ற போது அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சைக்கு வந்தார் என்றால் சரிதான்.

நீங்கள் சொன்ன மாதிரி சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் பஞ்சாயத்து செய்த பிறகு எதிரிகள் நஷ்ட ஈடு தரவேண்டும் என்று நீங்கள் ரவுடிகளை அழைத்து சென்று 1வது எதிரியே மிரட்டினேன் என்றால் சரியல்ல. அன்று இரவு நீங்கள் ரவுடிகளுடன் சென்று பிரச்சனை செய்த போது 1வது எதிரி ஊர்காரர்கள் விரட்டிவிட்டார்கள் அதில் உங்களுக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நீங்கள் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் மருத்துவமனை சென்று சிகிச்சை பெறவில்லை என்றால் சரியல்ல.

நீங்கள் மற்றும் உங்கள் தரப்பினர் மூன்றடைப்பில் உணவத்தில் வைத்து தாக்கி காயம் ஏற்படுத்தி சிகிச்சையில் இருந்த விபரத்தை அறிந்து உங்களுக்கு தன்னிச்சையாக ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவமனை சென்று புகார் அளித்துள்ரீகள் என்றால் சரியல்ல. எதிரி உங்கள் மீது வழக்கு கொடுத்துவிடுவார் என்று எண்ணி அவர் மீது பொய்யான ஒரு வழக்கு அளித்துள்ரீகள் என்றால் சரியல்ல. உங்கள் பலத்தை பயன்படுத்தி எதிரி அளித்த புகாருக்கு வழக்கு பதிவு செய்யவிடாமல் தடுத்துள்ளிர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் கூறுவது போல் எந்தவொரு வழக்கு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.**மறு விசாரணை இல்லை**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.187/2019 |
| Deposition Of Witness for | Prosecution PW 2<br>Defense<br>Court |
| Name | **திரு. மணி** |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2024 |

1 வது எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மற்றொரு எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 30th day of August 2024.

நான் அய்யனார்குளம்பட்டியில் வசித்து வருகிறேன். கொத்தனார் வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 எனது மகன். எனது மகள் முப்பிடாதியை 2 வது எதிரிக்கு திருமணம் செய்து வைத்துள்ளேன். 1 வது எதிரி 2 வது எதிரியின் தந்தை ஆவார். தேதி மாதம் ஞாபகமில்லை சுமார் 5 வருடத்திற்கு முன்னர் காலை 11.00 மணிக்கு எனது மகள் மருமகனான 2 வது எதிரியிடம் பிரச்சனை ஏற்பட்டது என்று எனக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்தார்.

அப்போது தகவல் அறிந்து அ.சா.1 எனது அக்கா நாச்சியார் மற்றும் நான் ஆகியோர்கள் 2 வது எதிரி வீட்டிற்கு சென்றோம். அப்போது தகராறு ஏற்பட்டது. அதில் 1 வது எதிரி எனது மகளை அவதூறான வார்த்தையில் பேசினார். அதனால் எனது மகனான அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டு கைகலப்பில் எனது மகனை கம்பை வைத்து தலையில் அடித்து கீழே தள்ளிவிட்டார்கள். பின்னர் சிகிச்சைக்காக அ.சா.1 திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றார். மருத்துவமனையில் இருந்த போது மூலைக்கரைப்பட்டி போலிசாரிடம் புகார் வாக்குமூலம் அளித்தார். போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை

செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி முத்துகிருஷ்ணனுக்கும் உங்கள் மகள் முப்பிடாதிக்கும் இடையே பஞ்சாயத்து பேசி விவாகரத்து பெற்றுள்ரீர்கள் என்றால் சரிதான்., விவாகரத்து பெற்ற அன்று அவரவர் ஜாமான்களை அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீங்கள் எதிரி முத்துகிருஷ்ணனுக்கு நீங்கள் போட்ட மைனர் செயினும் பெற்று கொண்டிற்கள் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற பின்பு ஊருக்கு நான் பஸ்ஸில் சென்றேன். உங்கள் மகன் அ.சா.1 சம்பவ இடத்திலிருந்து காவல்நிலையத்திற்கு ஆம்னி வண்டியில் சென்றார்கள்.

திருமணத்தின் போது உங்கள் மகளுக்கு எத்தனை பவுன் நகை போட்டார்கள் என்றால் 2 1/2 லிருந்து, 3 பவுன் தாலி செயின் போட்டார்கள். மேற்படி தாலி யாரிடம் உள்ளது என்றால் சம்பவ நடந்தன்று கைகலப்பில் தாலி செயின் காணாமல் போய்விட்டது. கூட்டமாக இருந்ததால் ஒருவருக்கிடையே தள்ளுமுள்ளு நடந்தது என்றால் சரிதான். தள்ளுமுள்ளுவில் அ.சா.1 யை தள்ளி கீழே விழுத்ததில் அவருக்கு காலில் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான்.

நீங்கள் சம்பவ தினத்தன்று சம்பத்திற்கு பிறகு தகராறு குறித்து ஊரில் போய் உறவினர்களிடம் சொன்னீற்கள் என்றால் சரிதான். தகவல் அறிந்து அமுதா, நாச்சியார், தாய்மாமா செல்வராஜ் ஆகியோர்கள் மருத்துவமனைக்கு அ.சா.1 யை பார்க்க சென்றார்கள் என்றால் சரிதான். உங்களை போலிசார் விசாரணை செய்தார்களா என்றாதல் செய்யவில்லை. நீங்கள் சொன்ன தேதியில் நேரத்தில் சம்பவ இடத்திற்கு சென்றதாக பொய் என்று சொன்னால் சரியல்ல.

உங்கள் மகன் அ-சா.1 எதிரி வீட்டிற்கு ரவுடிகளுடன் சென்று நஷ்டஈடு கேட்டு தகராறு செய்தார் என்றால் சரியல்ல. நஷ்டஈடு கேட்டு தகராறு செய்யும்போது 1 வது எதிரி தனது மகனிடம் கேட்குமாறு கூறிய போது அ.சா.1, 2 வது எதிரி வேலை செய்யும் உணவத்திற்கு சென்று 2 வது எதிரியை அடித்துவிட்டார் என்றால் சரியல்ல.

2 வது எதிரியை உங்கள் தரப்பினர் தாக்கியதால் வழக்கு கொடுத்துவிடுவார் என்று எண்ணி அவர் மீது பொய்யான ஒரு வழக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நீங்கள் கூறுவது போல் எந்தவொரு வழக்கு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**